**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2026–ம் வருடம் ஜனவரி திங்கள் 05–ம் நாளன்று 30 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.46–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **கணேஷ்குமார்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 30 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 30 வது பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.242 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.09.2008–ம் தேதியிட்ட 60 வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.6293/2008 நகல் பி.வா.சா.ஆ.243 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.08.2009 தேதியிட்ட பிழைத்திருத்தல் பத்திரம் நகல் பி.வா.சா.ஆ.244 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.12.2025–ம் தேதியிட்ட 30 வது பிரதிவாதி பெயரிலான வில்லங்கச் சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.245 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(ஆவணம் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** 14.02.2018 தேதியிட்ட தும்பிவாடி கிராம 1427 பசலில் 30 வது பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட வரி ரசீது நகல் பி.வா.சா.ஆ.246 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(நகல் ஆவணம் என்பதால் ஆட்சேபனை**

**தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** 15.12.2025-ம் தேதியிட்ட 30வது பிரதிவாதி பெயரிலான தனிப்பட்டா எண்.1412 ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.247 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.08.2018 தேதியிட்ட DTCP Application Registration No.DTCP/P/038501/2017 ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.248 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(நகல் ஆவணம் என்பதால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 4, 6 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 76, 78 முதல் 87, 89 முதல் 100, 102, 104 முதல் 105, 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

உங்களை ஏற்கனவே இந்த வழக்கில் பி.வா.சா.1 ஆக விசாரித்ததால் மீண்டும் உங்களை தற்போது விசாரித்து உங்கள் விசாரணை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே நான் சங்கத்திற்காக சாட்சியம் அளித்துள்ளேன் தற்போது நான் தாவா சொத்தில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கியுள்ளதால் எனக்காக நான் தற்போது சாட்சியம் அளிக்கினே். நான் தற்போது கரூர் மாவட்டம், காந்திகிராமத்தில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊரிலிருந்து இருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 20 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும், என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. பி.வா.சா.ஆ.243 மூலம் நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால்

பி.வா.சா.ஆ.243–ன் கீழ் நீங்கள் வாங்கிய கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நீங்கள் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் வாங்கிய பி.வா.சா.ஆ.243 கிரையம் செல்லாததால் அதன் அடிப்படையில் வாங்கிய பி.வா.சா.ஆ.247 கூட்டுப்பட்டா மற்றும் பி.வா.சா.ஆ.244 திருத்தல் பத்திரம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 13.08.2018–ம் தேதியிட்ட DTCP Application Registration No. DTCP/P/038501/2017 ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.248 ஆவணம் மற்றும் பி.வா.சா.ஆ.246 வரி ரசீது போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க யார் உங்களை அழைத்து வந்தார்கள் என்றால் நீதிமன்றத்தில் இருந்த வந்த நோட்டீசின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.05 17:17:17 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.